**IN THE COURT OF THE PRESIDING OFFICER, LABOUR COURT, SALEM**

**I.D. No. 86 /2015 (Batch Cases in ID.Nos.87 to 92/2015 and 94/2015)**

**Deposition of RW.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : B. Senthilkumar | Husband / Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Age | : | Calling | : |

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Tmt. N. Mani, Deputy Nazir, Bench Clerk(i/c) of this court on 08.01.2021 in accordance with Provisions X of Evidence Act 1872.

<u>**குறுக்கு விசாரணை:**</u>

நான் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில், ஊத்தங்கரை கிளையில் 2020-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பணி செய்கிறேன். 2006 மே மாதம் முதல் 2012 அக்டோபர் மாதம் வரை நான் உத்தங்கரை கிளையில் பணியில் இல்லை என்றால் சரிதான். போக்குவரத்து கழகங்களுக்கான பொதுப்பணி விதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்திற்கு சான்றளிக்கப்பட்ட நிலையாணை இல்லை. எதிர்மனுதாரர் போக்குவரத்து கழக, தருமபுரி மண்டலம் பொது மேலாளரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது என்றால் சரி. எ.ம.சா.ஆ.2 சுற்றறிக்கை சேலத்தில் உள்ள போக்குவரத்து கிளைகளுக்கு அனுப்பப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 சுற்றறிக்கை தருமபுரியில் உள்ள கிளைகளுக்கு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 அரசாணை, வேலை நியமன

தடைச்சட்டத்தை விலக்கி கொள்வதற்கான அரசாணை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 சுற்றறிக்கையில் முறையற்ற பணி நியமனங்களை செய்யும் அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. நான் சிவக்குமார் என்ற மனுதாரரின் வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன். அந்த வழக்கு எண் எனக்கு தெரியாது. மனுதாரர் சிவக்குமார் தாக்கல் செய்துள்ள மனுவில் என்ன விவரங்கள் சொல்லியிருக்கிறார் மற்றும் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மனுதாரர் சிவக்குமார் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு, பதிலுரை தாக்கல் செய்ய, என்னிடம், பொது மேலாளர் கருத்து எதுவும் கேட்கவில்லை என்றால் சரி. எதிருரையில் கையெழுத்துப்போட்ட மேலாளர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அந்த எதிருரையில் என்னென்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது. நான் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில், பணி நியமனங்களை செய்யக்கூடிய தேர்வு குழுவில் உறுப்பினர் இல்லை என்றால் சரி. எதிர்மனுதாரர் கழகத்தில் ஒரு நபர் பணியில் அமர்த்தப்பட்டால் முதலில் பயிற்சி ஓட்டுநராகவும், அதன்பிறகு தினக்கூலியாகவும் பின்னிட்டு நிரந்தர தொழிலாளியாகவும் நியமிக்கப்படுவார்கள் என்று நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதை நிரூபிக்க ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். தொழிற்தகராறு சட்டத்தில் உள்ள பிரிவுகள் மற்றும் வரையரைகள் என்னவென்பது எனக்கு தெரியாது. மனுதாரர் என்ன பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. அத்தியாவசிய தேவையை அனுசரித்து விழா காலங்களிலும், வேலை நிறுத்த காலத்திலும், நிரந்த தொழிலாளர் விடுமுறையில் செல்லும்போதும் தினக்கூலி தொழிலாளர்களை பணியில் அமர்த்திக்கொள்வது

தொடர்பாக அரசு மற்றும் பொது மேலாளர் உத்தரவு இல்லை என்றால் சரி. எதிர்மனுதாரர் கழக பேருந்தில் முதல்நான் பணியேற்ப்பு செய்யும் தொழிலாளர்கள், மறுநாள் பணி முடித்து செல்வதுதான் நடைமுறை என்றால் சரி. எந்த பேருந்தில், எந்த வழித்தடத்தில், எந்த ஓட்டுநர் மற்றும் நடத்துநருக்கு பணி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதற்கு பணி பராமரிப்பு பதிவேடு (Duty Chart) பராமரிக்கிறோம். ஓட்டுநராக இருந்தால் பேருந்திற்கு தேவையான டீசலை பூர்த்தி செய்து, அதற்கான அட்டையில் பதிவு செய்ய வேண்டும். நடத்துநராக இருந்தால் இன்வாய்ஸ் மற்றும் டிக்கெட் எண்கள் பதிவு செய்து கொடுக்கப்படும். பேருந்து வழித்தடத்தில் இயக்குவதற்காக பணிமனையிலிருந்து வெளியே எடுத்துச்செல்லும்போது, Check-in and Check out பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்றால் சரி. அந்த பதிவேட்டில் பேருந்து எண், பணியாளர்கள் பெயர் பதிவு செய்யப்படும் என்றால் சரி. வழித்தடத்தில் பேருந்து இயக்கப்படுவதற்கு Log Book and Trip Sheet பராமரிக்கப்படுகிறது என்றால் சரி. பயணச்சீட்டு வினியோகம் செய்வதற்கு Invoice பராமரிக்கப்படுகிறது என்றால் சரி. இந்த மூன்று ஆவணங்களிலும் பேருந்தை இயக்கிய ஓட்டுநர் மற்றும் நடத்துநர் பெயர் பதிவு செய்யப்படும் என்றால் சரி.  பணி முடித்து வசூல் தொகை செலுத்தப்படும்போதும், பணியாளர்கள் பெயர் பதிவு செய்யப்படும் என்றால் சரி. 15.05.2006 முதல் 01.10.2012 வரை ஒவ்வொரு ஆண்டும் எத்தனை நாட்கள் மனுதாரர் சிவக்குமார் பணி செய்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. தினக்கூலி பணியாளர்களுக்கு தினசரி பணி நியமன உத்தரவு, பணி நீக்க உத்தரவு கொடுக்கப்படுவதில்லை என்றால் சரி. 02.09.2016 தேதியிட்டு நீதிமன்றம் மூலம் எதிர்மனுதாரருக்கு ஆவணங்களை தாக்கல் செய்திட கொடுக்கப்பட்ட அறிவிப்பில் கோரப்பட்டுள்ள ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

ம.சா.ஆ.15 12(3) ஒப்பந்தத்தில் ஷரத்து 4-ல், தினக்கூலி பணியாளர்களை, நிரந்தர பணியாளர்களாக்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரி. எ.ம.சா.ஆ.3 அரசாணை எண்.57/2005 ஆகும். ம.சா.ஆ.16 அரசாணை எண்.41/2006 ஆகும். ம.சா.ஆ.16 அரசாணை பணிநியமனம் குறித்து பிறக்கப்பிட்டது. மனுதாரர் தினக்கூலியாக பணிபுரிந்ததை எதிருரையிலும், எனது முதல்விசாரணை சாட்சியத்திலும் ஒப்புக்கொண்டுள்ளோம் என்றால் சரி. தொடர்ந்து 6 ஆண்டு காலம் எவ்வித பணிமுறிவுமின்றி தொடர்ந்து பணி செய்த மனுதாரரை, எவ்வித முன் அறிவிப்பும் இன்றி, வாய்மொழியாக பணிநீக்கம் செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரின் பணிகுறித்த விவரம் எதுவும் தெரியாமல், நிர்வாகம் தயாரித்துக்கொடுத்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள பரிகாரத்தை பெறுவதற்கு மனுதாரருக்கு முழு உரிமை உண்டு என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- T.Munusamy,
Presiding Officer,
Labour Court, Salem.